# புதுப் பொலிவுடன் பொன்விழா!

## வீயெஸ்வி

**நா**ன்கு வருடங்கள் தொடர்ந்து ஆட்சியில் இருந்தாலே ஆகாயத்துக்கும் பூமிக்கும் துள்ளிக்குதிக்கும் காலம் இது!

இங்கே சென்னையில் சபா ஒன்று சத்தம் போடாமல் ஐம்பது வருடங்களாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

நியாயமாகப் பார்த்தால் ஆர்ப்பாட்டமாக கொண்டாட வேண்டிய வைபவம் இது.

அதாவது, மாபெரும் பேரணி நடத்தி, பிரமாண்ட கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஆனால் கலைச் சேவை புரிந்துவரும் சபாவுக்கு லாரிகளில் ஆட்களை அழைத்து வந்து பேரணி நடத்தி கூட்டம் போடும் 'கலை' தெரியாது!

பொன்விழா காணும் சபாவுக்கு ஜெமினி மேம்பாலத்துக்கு அடியிலும் பனகல் பூங்காவில் நல்லிக் கடைக்கு எதிரிலும் பேனர் வைக்கலாம்! சபாவின் வாயிலில் அதன் செயலாளருக்கு ஆளுயர கட்-அவுட் வைக்கலாம்! வைக்கமாட்டார்கள். இதற்கெல்லாம் ஸ்பான்சர்கள் கிடைக்கமாட்டார்கள் என்பதல்ல காரணம். 'இப்படியெல்லாம் அரசியல்வாதித்தனத்தோடு விளம்பரப்படுத்திதான் எங்கள் சபாவைப் பற்றி நாலு பேர் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கட்டாயமில்லை. அடக்கி வாசிக்கறதுதான் எங்களுக்குப் பிடிக்கும்...' என்பார்கள்.

சபாக்காரர்கள் வெளியே சொல்ல முடியாத காரணமும் ஒன்று உண்டு. தி.நகர் தெருக்களைச் சுற்றிப் பேரணி நடத்துவதாகவே வைத்துக்கொள்வோம். இந்தப் பேரணியில் இசை, நாட்டிய, நாடக உலக கலைஞர்கள் அத்தனை பேரும் கலந்துகொள்ள வேண்டும். ஒற்றுமை என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் கலைஞர்களை வைத்துக்கொண்டு, நடக்கற காரியமா இது?

இருந்தாலும், அப்படியொரு பேரணியைக் கற்பனையில் கண்டு மகிழ்ந்தேன்.

இதோ, முன்வரிசையில் ஜேசுதாஸ். வலதுபக்கம் லால்குடி. இடதுபக்கம் டி.என். கிருஷ்ணன். அவர் பக்கத்தில் பாலக்காடு ரகு, உமையாள்புரம் சிவராமன், காரைக்குடி மணி, வேலூர் ராமபத்ரன் என்று மிருதங்க வித்துவான்கள் ஜாலியாக அரட்டையடித்துக் கொண்டு வருகிறார்கள். சுதா ரகுநாதன், பாம்பே ஜெயஸ்ரீ, சௌம்யா, சஞ்சய், டி.எம்.கிருஷ்ணா, விஜய் சிவா என்று இளவட்டங்கள் இங்கிலீஷில் கிண்டலடித்தபடி நடக்கிறார்கள். பத்மா, சித்ரா, சுதாராணி, ஸ்ரீநிதி, அலமேர் வள்ளி என்று நடனமணிகள்... ஆர்.எஸ்.மனோகர், பூர்ணம், மௌலி, காத்தாடி, எஸ்.வி. சேகர், கிரேஸி மோகன், ஒ.ஜி. மகேந்தரா என்று நாடக மேடை பிரபலங்கள்...

கற்பனை பேரணிக்கே திருஷ்டிபட்டுவிடும் போலிருக்கிறது! எனவே, நிஜத்துக்கு வந்துவிடுகிறேன்!

★★ ★★ ★★

**சா**தாரண கீற்றுக் கொட்டகையில் ஆரம்பித்து, அஸ்பஸ்டாஸ் வேயப்பட்ட கூரையில் நிறைய வருடங்கள் குடித்தனம் நடத்தி, இப்போது அடையாளமே தெரியாத வகையில் உருமாறி கலைவாணி கோயில் கொண்டிருக்கும் கலைக்கூடமாக காட்சி தருகிறது கிருஷ்ண கான சபா.

வியர்வையும், புழுக்கமும் பழைய சரித்திரமாகி, தற்போது அரங்கம் முழுவதும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டு... மேடையில் நடக்கும் நிகழ்ச்சி பிடிக்கறதோ, இல்லையோ... இரண்டரை மணி நேரம் ஏ.ஸி-யில் உட்கார்ந்துவிட்டு வரலாம் என்று ரசிகர்கள் திரண்டு வருகிறார்கள்.

பெரிய அரங்கில் நடக்கும் பகல் நேரக் கச்சேரிகளுக்கு ஹாலின் நடுப்பகுதி குறுக்கே ஒரு நீல(ள)ப் படுதாவை இழுத்து விட்டு கூட்டமின்மையை மறைக்கும் அவசியமும் இப்போது இல்லை. 105 இருக்கைகள் கொண்ட மினி ஹால் ஒன்று இப்போது குட்டிப் போட்டிருக்கிறது. இங்கேயும் குளுகுளு வசதி உண்டு. வளரும் இளம் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக கட்டப்பட்டுள்ள இந்த மினி ஹாலில் கச்சேரி கேட்கும்போது கோயில் வளாகத்தில் உட்கார்ந்திருக்கும் தெய்வீக உணர்வு மேலிடுகிறது.

புதுப்பொலிவுடன் மெயின் ஹாலும், புனித சூழலுடன் மினி ஹாலும் மாற்றி அமைக்கப்பட்டுவிட்டாலும் ரசிகர்களுக்கு சின்னஞ்சிறு குறை ஒன்று உண்டு.

''இத்தனை செலவு செய்தவங்க! கையோடு பிரம்புநாற்காலிகளையும் குஷன் நாற்காலிகளாக மாற்றியிருக்கலாம்...'' என்று ரசிகர்கள் முணுமுணுப்பது சபாவின் தலைவர் நல்லி குப்புசாமியின் காதில் விழாமலா இருந்திருக்கும்!

சமீபத்தில் நடந்த கோகுலாஷ்டமி விழாவின்போது ''ஏ.ஸி. போடலை போலிருக்கே... ரொம்ப புழுக்கமா இருக்கே...'' என்று ஒரு சில நாட்களும், ''ஓவர் ஏ.ஸி. குளிர் நடுக்குது...'' என்று சில பெரிசுகளும் முணுமுணுத்தது காதில் விழுந்தது.

''அட போங்கய்யா... எத்தனை வசதிகள் செய்து கொடுத்தாலும் நம்மவங்களைத் திருப்திபடுத்த முடியாது...'' என்று சபாவின் செயலர் யக்ஞராமன் யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தது என் காதி விழுந்தது!

★★ ★★ ★★

ஐம்பது வருட சரித்திரத்தில் கிருஷ்ண கான சபாவில் மேடையேறாத கலைஞர்களே கிடையாது. இசை, நாட்டியம், நாடகம் என்று முத்தரப்புக்கும் இது பொருந்தும்.

கடந்த காலத்தில் சபாவில் நடந்த இரண்டு கச்சேரிகள் இன்றும் என் நினைவில் நிலைத்திருக்கின்றன.

ஒன்று, புல்லாங்குழல் மேதை மாலியின் கச்சேரி. தனது வாழ்நாளில் மாலி மேடையேறி வாசித்த கடைசி கச்சேரி அது. அன்று அரங்கம் நிரம்பி வழிந்தது. திரை விலகியதும் மேடையில் பக்கவாத்தியக்காரர்கள் புடைசூழ, கம்பீரமாக காட்சி தந்தார் மாலி. வழக்கம் போல் சால்வை அணிந்திருந்தார். வழக்கம் போல் தலைமுடியை இடது கையால் நீவிவிட்டுக்கொண்டார்.

கச்சேரி ஆரம்பமானது. மாலியின் குழலோசையில் ஆடியன்ஸ் அரை மயக்கத்தில் ஆழ்ந்தார்கள். அரை மணி நேரம்தான் வாசித்திருப்பார் மாலி. அதற்குமேல் தொடர்ந்து வாசிக்க அன்று அவருடைய உடல்நிலை இடம் தரவில்லை. மைக்கில் வருத்தம் தெரிவித்து அத்துடன் கச்சேரியை முடித்துக்கொண்டு விட்டார் மாலி. ரசிகர்கள் கூச்சலிட்டு கூப்பாடு போடவில்லை. மாறாக, அமைதியாக கலைந்து சென்றார்கள். கிருஷ்ண கான சபாவின் அங்கத்தினர்களுக்கு 'டிசிப்ளின்' ரசனையும் ரொம்ப அதிகம்!

**ம**காராஜபுரம் சந்தானம் புகழின் உச்சியில் இருந்த நேரம் அது. டிசம்பர் சீஸனில் அவருடைய சக்சேரி. அரங்கமும் சபாவின் கல்லாவும் நிரம்பி வழிந்தது! வெளியே பந்தலில் நாற்காலிகள் போடப்பட்டு ரசிகர்கள் உட்கார வைக்கப்பட்டார்கள். க்ளோஸ் சர்க்யூட் டி.வி. வசதி செய்து தரப்பட்டது.

அதற்குப் பிறகு யாருடைய கச்சேரிக்கும் இந்த அளவுக்கு கூட்டம் திரண்டுவந்ததாக நினைவில்லை. சந்தானம் எப்போதுமே ஸ்பெஷல். கிருஷ்ண கான சபா என்றால் அவருக்கு பிறந்தவீட்டுக்கு வருவது மாதிரி இரட்டிப்பு ஸ்பெஷல்!

★★ ★★ ★★

**டி**சம்பர் மாதத்தில் கிருஷ்ண கான சபாவின் இனாகுரேஷன் நாளான்று அரங்கினுள் நுழைந்தால் இஷ்டமித்ர பந்துக்களின் வீட்டுக் கல்யாணத்தில் கலந்துகொள்ளும் உணர்வு ஏற்படும்.

மேடையில் மங்கள இசை முழங்கிக்கொண்டிருக்க, முகப்பில் புன்சிரிப்புடன் நம்மை வரவேற்க காத்திருப்பார் சபா தலைவர் நல்லி குப்புசாமி. "வாங்கோ.... வாங்கோ..." என்ற உற்சாக குரல் கொடுத்து வரவேற்பார் யக்ஞராமன். "வீட்டுல அழைச்சுண்டு வரலையா?" என்று வாஞ்சையோடு கேட்பார் இணை செயலாளர் வெங்கடேஸ்வரன். "வாங்களேன்... சூடா காபி குடிச்சுட்டு வரலாம்..." என்று டைனிங் ஹாலுக்கு - ஸாரி கான்டீனுக்கு அழைப்பார், ஆக்டிவ் கமிட்டி மெம்பர் ராதாகிருஷ்ணன். இவை அத்தனையையும் விடியோ காமிராவும் ஸ்டில் காமிராவும் உள்வாங்கிக் கொள்ளும்.

மற்ற சபாக்களைவிட இன்னொரு வகையிலும் கிருஷ்ண கான சபாவின் டிசம்பர் விழா துவக்க நாள் சிறப்பு வாய்ந்தது. இங்கே இசை அளவுக்கு நாட்டியத்துக்கும் முக்கியத்துவம் உண்டு என்பதால் இனாகுரேஷனுக்கு நிறைய நடனமணிகள் 'மேக்-அப்'புடனும் மணக்கும் வாசனை பர்ஃப்யூம்களுடனும் அரங்கினுள் நுழைவார்கள். இது கண்களுக்கு நாசிக்கும் நல்விருந்து.

★★ ★★ ★★

**ச**பா நடத்துவது என்பதும், இதில் ஒவ்வொரு வருடமும் சீஸன் நடத்தி முடிப்பது என்பதும் எவ்வளவு சிரமமான காரியம் என்பது நிர்வாகிகளைக் கேட்டால் தான் தெரியும். குறித்த நேரத்தில் பாடகர் வரவேண்டும். பக்கவாத்தியக்காரர்கள் வந்து சேரவேண்டும். தம்புரா போட ஆள் கிடைக்க வேண்டும். இப்படி நிறைய டென்ஷன்கள்!

செயலாளர் யக்ஞராமனால் முதல் வரிசையில் உட்கார்ந்து முழுப்பாட்டையும் கேட்க முடிவதில்லை. ஆலாபனை முடிவதற்குள் அடுத்தடுத்து ஆறேழு பேர் வந்து காதில் எதையோ முணுமுணுத்து அவரை அழைத்துச் சென்றுவிடுவார்கள். அதனால்தான் ஒரு கச்சேரி முடிவதற்குள் ஏழெட்டு தடவை எழுந்து வெளியே போய், உள்ளே நுழையும் கட்டாயம் அவருக்கு!

★★ ★★ ★★

**கி**ருஷ்ண கான சபாவின் துவக்க விழாக்களில் எப்போதுமே பக்தி மணம் கமழும். காஞ்சி மடத்திலிருந்து பண்டிதர்கள் வருவார்கள். ஸ்வஸ்தி வாசகம் சொல்வார்கள். மேடையில் வீற்றிருக்கும் பிரபலங்களுக்கு சால்வை அணிவித்துப் பிரசாதங்கள் வழங்குவார்கள். அரங்கிலிருப்பவர்கள் 'ஹரஹர சங்கர...'வை மனதுக்குள் உச்சாடனம் செய்வார்கள்.

ஒவ்வொரு டிசம்பர்/ஜனவரியிலும் இங்கே நடக்கும் நாட்டிய கலா மாநாடு இன்னொரு சிறப்பு. உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் டெலிகேட்ஸ் வந்திருந்து நாட்டியம் பற்றிய ஆராய்ச்சி பேப்பர்கள் வாசித்து விவாதிப்பர்கள். கடந்த இருபத்து மூன்று வருடங்களாக வெற்றிகரமாக நடந்து வரும் மாநாடு சென்னையில் வேறு எந்த சபாவிலும் நடத்தப்படாத ஒன்று.

நிருத்ய சூடாமணி விருதையும் பரதநாட்டியக் கலைஞர்களுக்கு மட்டுமே என்று வைத்துக்கொள்ளாமல், கதக், கதக்களி, ஒடிஸி என்று பல்வேறு பிரிவினர்களுக்கும் வழங்கிவருவதும் பாராட்டுக்குரியது.

அதேபோல், நாமசங்கீர்த்தனத்துக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். அதன் உச்சகட்டமாக நாம சங்கீர்த்தனம் கற்றுத்தர மினி ஹாலில் வகுப்பு நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எதிர்காலத்திலும் நாமாவளிகள் நாலாப்புறத்திலும் ஒலிக்க இது உதவும்.

இன்னொரு விஷயத்திலும் கிருஷ்ண கான சபா காலரைத் தூக்கிவிட்டுக் கொள்ளலாம்! துவக்க நாளன்று மங்கள இசையோடு நாகஸ்வரத்தை மூட்டைக்கட்டி பரணில் வைத்துவிடாமல் ஒவ்வொரு பொங்கல் சமயத்திலும் இங்கே நான்கு நாட்களுக்கு நாகஸ்வர இசை விழா நடந்து வருகிறது, கடந்த இருபது வருடங்களாக!

★★ ★★ ★★

“பொன்விழா காணும் இந்த சபா நூற்றாண்டு விழாவையும் கொண்டாட வேண்டும்... அன்றும் இன்று போல் நானும் வந்திருந்து வாழ்த்த வேண்டும்....”

எண்பது வயது நிரம்பிய பெரிசுகள்கூட பொன்விழா மேடையேறினால் இப்படிப் பேராசையோடு வாழ்த்துவது ஒரு ரகம்.

இன்னொரு ரகமும் உண்டு -

“பொன்விழா காணும் இந்த சபாவையும், ஆயிரம் பிறை கண்டுவிட்ட அதன் செயலாரையும் வாழ்த்த எனக்கு வயதில்லை... வணங்குகிறேன்...” என்பார்கள் அவர்கள்.

அடியேன் இரண்டாவது ரகம்!